**ஜனவரி – 30**

# TNPSC துளிகள்

- ஐக்கிய நாடுகள் அவையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒரு வழக்கமான நிதி நிலை அறிக்கை மதிப்பீட்டில் இந்தியா 29.9 மில்லியன் டாலர் தொகையைச் செலுத்தியுள்ளது.
  - இந்தியா தற்போது 15 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பினராக, அதன் பதவிக்காலம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று நிறைவடைகிற நிலையில், உள்ளது.
- ஜம்மு & காஷ்மீரின் காவல் துறையின் 115 காவலர்களுக்கு, இந்த ஆண்டில் எந்தவொரு மாநிலக் காவல்துறைக்கும் வழங்கப் பட்டதை விட அதிக எண்ணிக்கையிலான ஒரு அளவில், வீரதீரப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
  - இதனைத் தொடர்ந்து மத்திய சேமக் காவற்படை (30), சத்தீஸ்கர் காவல்துறை (10), ஒடிசா காவல்துறை (9) மற்றும் மகாராஷ்டிரா காவல்துறை (7) ஆகியவை உள்ளன.
- இந்தியா-மத்திய ஆசியா உச்சி மாநாட்டின் முதல் சந்திப்பினைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.
  - இந்தச் சந்திப்பில் கசகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாட்டின் அதிபர்கள் பங்கேற்றனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகம்





- 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள (ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு) புலிகளின் எண்ணிக்கை 80 என்ற ஒரு அளவில் இரட்டிப்படைந்ததையடுத்து அந்தக் காப்பகத்திற்கு மதிப்பு மிக்க TX2 என்ற ஒரு விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- சத்தியமங்கலம் வனவிலங்குச் சரணாலயமானது 2013 ஆம் ஆண்டில் ஒரு புலிகள் வளங்காப்பகமாக அறிவிக்கப்பட்டது.
- இது நீலகிரி மலைப் பகுதிக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் நிலப்பகுதிக்கும் இடையிலான ஒரு முக்கியமான இணைப்புப் பகுதியாகும்.

- இந்தக் காப்பகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் நீலகிரி உயிர்க்கோளக் காப்பகமானது தற்போது உலகிலேயே அதிக அளவில் புலிகள் வாழும் இடமாக திகழ்கிறது.
- ஒப்பீட்டளவில் புதிதான இந்தப் புலிகள் காப்பகத்தினை, இந்தியாவிலுள்ள புலிகளின் மூலப்பகுதிகளுள் ஒன்றாக மாற்றுவதற்கு மாநில அரசுகள் மற்றும் உள்ளூர் சமூக அமைப்புகள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு TX2 விருது ஒரு முக்கிய அங்கீகாரத்தை அளிக்கிறது.
- சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தினைத் தவிர்த்து, நேபாளத்திலுள்ள பார்டியா என்ற தேசியப் பூங்காவிற்கும் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக இந்த ஆண்டின் TX2 விருதானது வழங்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## India’s women Unsung Heroes – புத்தகம்




- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி, “India’s Women Unsung Heroes” என்ற ஒரு சித்திரப் படப் புத்தகத்தினை வெளியிட்டு உள்ளார்.
- தேசத்தின் மறக்கப்பட்ட சில பெண் விடுதலை வீராங்கனைகளுக்கு அர்ப்பணிக்கும் விதமாக இப்புத்தகமானது வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது அமர் சித்ர கதா என்ற அமைப்புடன் இணைந்து கலாச்சாரத் துறை அமைச்சகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது சகாலி இலாமா, பத்மஜா நாயுடு, துர்காபாய் தேஷ்முக் போன்ற இந்தியாவின் 75 பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனைகளின் வாழ்க்கை

வரலாற்றைப் போற்றுகிறது.

## 5 ஆண்டு காலச் செயல்திட்டம் – 300 மில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணு ஆற்றல் மூலங்கள்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது மின்னணுத் துறைக்கான இரண்டாவது 5 ஆண்டுகாலச் செயல்திட்டம் மற்றும் இரண்டாம் பாக குறிக்கோள் ஆவணத்தினை (Vision Document 2.0) வெளியிட்டுள்ளது.
- "2026 ஆம் ஆண்டிற்குள் 300 பில்லியன் டாலர் மதிப்பிலான நிலையான மின்னணு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள்" என்று தலைப்பிடப்பட்ட இந்தக் குறிக்கோள் ஆவணத்தினை இந்திய செல்லிடப்பேசி மற்றும் மின்னணுச் சங்கத்துடன் இணைந்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தயாரித்துள்ளது.
- "இந்தியாவின் மின்னணுப் பொருள் ஏற்றுமதி மற்றும் உலக மதிப்புத் தொடரில் அதன் பங்கு ஆகியவற்றை அதிகரித்தல்" என்று தலைப்பிடப்பட்ட இந்த ஆவணத்தின் முதல் பாகமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிடப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்குள், தற்போதுள்ள 75 பில்லியன் டாலர் மதிப்பிலிருந்து 300 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு மின்னணுப் பொருள் உற்பத்தி மூலமாக இந்தியாவினை மாற்றுவதற்கு இது உதவும்.

## ஏர் இந்தியா – டாடா குழுமம்





- இந்திய அரசானது இந்தியாவின் முதன்மையான விமான நிறுவனமான ஏர் இந்தியாவினை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 20 அன்று அதிகாரப் பூர்வமாக டாடா குழுமத்திடம் ஒப்படைத்தது.
- இந்த நிறுவனத்தைக் கையகப்படுத்தி கிட்டத்தட்ட 69 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- இந்த ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பானது ரூ.18,000 கோடி (2.4 பில்லியன் டாலர்) ஆகும்.
- இந்த மூலோபய முதலீட்டு விலக்குப் பரிவர்த்தனையானது நிர்வாக கட்டுப்பாட்டுடன் சேர்த்து ஏர் இந்தியா நிறுவனத்தில் உள்ள இந்திய அரசின் 100% அளவிலான பங்கினைப் பரிமாற்றம் செய்வதையும் உள்ளடக்கியதாகும்.
- இந்தப் பரிமாற்றத்தில் ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏர் இந்தியா SATS உள்ளிட்ட நிறுவனங்களும் அடங்கும்.
- இந்த நிறுவனமானது, 1932 ஆம் ஆண்டில் கராச்சிக்கும் பம்பாய்க்கும் இடையில் JRD டாடா முதல் விமானத்தை இயக்கியதோடு சேர்த்து தொடங்கப் பட்டது.

## மனிதனின் தலைமுடியை ஏற்றுமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்பு

- இந்திய அரசானது மனிதனின் தலைமுடியை ஏற்றுமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது.
- இந்தியாவிலிருந்து பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக வேண்டி இந்தத் தடையானது விதிக்கப் பட்டுள்ளது.
- தற்போது இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி நிறுவனங்கள் மனிதனின் முடியினை ஏற்றுமதி செய்வதற்கு, வெளிநாட்டு வர்த்தகப் பொது இயக்குநகரத்திடமிருந்து ஒரு அனுமதி (அ) உரிமத்தினைப் பெற்றிருக்க வேண்டும்.

## பஸ்சிம் லேஹர் பயிற்சி (XPL – 2022)




- இந்தியக் கடற்படையின் மேற்குக் கடற்படைப் பிரிவானது மேற்குக் கடற்கரையின் அருகே பஸ்சிம் லேஹர் (XPL – 2022) எனப்படும் ஒரு கூட்டுக் கடல்சார் பயிற்சியினை மேற்கொண்டது.
- இந்தப் பயிற்சியானது இந்தியக் கடற்படை, இந்திய விமானப் படை, இந்திய ராணுவம் மற்றும் கடலோரக் காவற்படை ஆகியவற்றின் இடையேயான ஒரு ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.
- மேற்குக் கடற்படைப் பிரிவானது இந்தியக் கடற்படையின் 3 படைப் பிரிவுகளுள்

ஒன்றாகும் (தலைமையகம் – மும்பை).

- இதர இரண்டு படைப் பிரிவுகளாவன; கிழக்குக் கடற்படைப் பிரிவு (தலைமையகம் – விசாகப் பட்டினம்) மற்றும் தெற்குக் கடற்படைப் பிரிவு (தலைமையகம் – கொச்சின்).

### CHIRU – 2022 பயிற்சி

- ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் கடற்படைகள் ஓமன் வளைகுடாவில் CHIRU – 2022 எனும் ஒரு கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இந்தியப் பெருங்கடலின் வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயிற்சியின் ஒரு நோக்கமானது 3 நாடுகளின் கடற்படைகளுக்கிடையில் நடைமுறை சார்ந்த ஒரு ஒத்துழைப்பினை மேலும் ஆழமாக்குதலாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### பிராண்ட் ஃபைனான்ஸ் 2022 – உலகின் முன்னணி 500 தயாரிப்புகள் அறிக்கை

**TOP 10 BRAND VALUE**

| Brand | Rank 2022 | 2021 | Value ($) |
|---|---|---|---|
| Apple | 1 | 1 | 355,080 |
| Amazon | 2 | 2 | 350,273 |
| Google | 3 | 3 | 263,425 |
| Microsoft | 4 | 4 | 184,245 |
| Walmart | 5 | 6 | 111,918 |
| Samsung Group | 6 | 5 | 107,284 |
| Facebook | 7 | 7 | 101,201 |
| ICBC | 8 | 8 | 75,119 |
| Huawei | 9 | 15 | 71,233 |
| Verizon | 10 | 9 | 69,639 |

Source: Brand Finance Global 500

- ஆப்பிள் நிறுவனமானது 2022 ஆம் ஆண்டிலும் மிகவும் மதிப்பு மிக்க ஒரு நிறுவனமாக தனது நிலையைத் தக்க வைத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் ஆப்பிள் நிறுவனத்தின் மதிப்பு 355.1 பில்லியன் டாலராக, கடந்த ஆண்டை விட 35% அதிகமான அளவில், மதிப்பிடப் பட்டது..
- பிராண்ட் ஃபைனான்ஸ் உலகின் முன்னணி 500 தயாரிப்புகள் தரவரிசையில் இது வரை பதிவான அதிகபட்ச மதிப்பீடு இதுவே ஆகும்.
- டிக்டாக் நிறுவனமானது இந்தப் பட்டியலில் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு நிறுவனமாக இடம் பெற்றுள்ளது.
- தொழில்நுட்பத் துறையானது, துறைகள் சார்பில் மிக மதிப்புமிக்க தொழில்துறையாக இடம் பெற்றுள்ளது.
- இதனையடுத்து சில்லறை வணிகம், வங்கி, ஊடகம் மற்றும் தொலைத் தொடர்பு

ஆகியவை முறையே முதல் 5 இடங்களைப் பெற்றுள்ளன.

- இந்திய நிறுவனமான டாடா குழுமம் இந்தியா மற்றும் தெற்கு ஆசியப் பகுதிகளில் மிகவும் மதிப்பு மிக்க ஒரு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- முதல் 100 இடங்களில் இடம் பெற்ற ஒரே இந்திய நிறுவனம் இதுவாகும்.
- உலகளவில் டாடா குழுமத்தின் தரவரிசை 78 ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## யுனிட்டி சிறுகடன் வங்கியுடன் PMC வங்கி ஒருங்கிணைப்பு




- பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியினை யுனிட்டி சிறுகடன் வங்கியுடன் இணைக்க இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- அதாவது PMC வங்கியின் அனைத்து கிளை வங்கிகளும் யுனிட்டி சிறுகடன் வங்கியின் கிளைகளாக செயல்படும்.
- யுனிட்டி சிறுகடன் வங்கியானது ரெசிலியன்ட் இன்னோவேசன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் (Resilient Innovation Private Limited) சேர்த்து சென்ட்ரம் ஃபைனான்சியஸ் சர்வீஸ் நிறுவனத்தினால் (Centrum Financial Services Limited) இயக்கப்படுகிறது.

## சீனாவுடனான இந்தியாவின் இருதரப்பு வர்த்தகத்தில் உயர்வு

- சீன அரசின் தரவுகளின் படி 2021 ஆம் ஆண்டில் சீனாவுடனான இந்தியாவின் இரு தரப்பு வர்த்தகமானது 43.3% உயர்ந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இறக்குமதியின் மதிப்பு 97.5 பில்லியன் டாலராக உயர்ந்தது. (46.1% உயர்வு)
- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியின் மதிப்பானது 28.1 பில்லியன் டாலராக (34.9% உயர்வு) உயர்ந்தது.

- 2021 ஆம் ஆண்டில் சீனாவுடனான இந்தியாவின் மொத்த வர்த்தக மதிப்பு 125.7 மில்லியன் டாலராகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அடித்தண்டழுகல் நோய்




- கேரளாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தென்னை தண்டழுகளுடன் தொடர்புடைய கேனோடெர்மா (Ganoderma) எனும் இனத்தைச் சேர்ந்த ஜி. கேரலென்ஸ் மற்றும் ஜி. சூடோ ஆப்லனாட்டம் (G. keralense and G. pseudoapplanatum) எனும் இரு புதிய பூஞ்சை இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- அடித் தண்டழுகல் நோயானது பாமாயில் சாகுபடியில் நிலவும் பெரிய தடைகளுள் ஒன்றாகும்.
- இந்த நோயானது இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமாக அழைக்கப் படுகிறது. அவை எடுத்துக்காட்டாக,
    - கேனோடெர்மா வில்ட் (ஆந்திரப் பிரதேசம்)
    - அனபெரோகா (கர்நாடகா) மற்றும்
    - தஞ்சாவூர் வில்ட் (தமிழ்நாடு) மற்றும் பல.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★